தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**07.10.2013**

**விவசாயிகளைப் பாதிக்கும் மருதையாறு நீர்த்தேக்கத் திட்டம் கூடாது : ஆ. ராசா பேச்சு**

மருதையாற்று நீர்த் தேக்கத் திட்டத்தைச் செயல்படுத்தக் கூடாது என்றார் முன்னாள் மத்திய அமைச்சர் ஆ. ராசா.

பெரம்பலூர் மின்வாரிய மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் எதிரே, தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் சார்பில் கொடியேற்றி, கல்வெட்டைத் திறந்து வைத்த அவர் மேலும் பேசியது:

தற்போது ரூ. 108 கோடியில் அறிவிக்கப்பட்டுள்ள மருதையாற்று நீர்தேக்கத் திட்டத்துக்கு சுற்றுச்சூழல் துறையிடம் அனுமதி பெறவில்லை, நிலம் கையகப்படுத்தப்படவில்லை, வட்டாட்சியர், நில அளவையர் ஆகியோர் அந்த நிலத்தைப் பார்வையிட்டு ஒதுக்கவில்லை. இத் திட்டம் கொண்டுவரப்பட்டால் அங்குள்ள விவசாயிகள் மிகவும் பாதிப்புக்குள்ளாவர்.

பெரம்பலூர் மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டும், பல ஆண்டுகளாக மின் பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் பிரிக்கப்படாமல், திருச்சியில் செயல்பட்டு வந்தது. திமுக ஆட்சிக்கு வந்த பிறகு பெரம்பலூர் மாவட்டத்துக்கான மின் பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் தொடங்கப்பட்டது.

திமுக ஆட்சியின்போது, ஒரே பட்ஜெட்டில் பெரம்பலூர் மாவட்டத்துக்கு 7 திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன.

அவற்றில், மருத்துவக் கல்லூரியைத் தொடங்குவதற்கு முன் பேரவைத் தேர்தல் வந்துவிட்டதால், அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியவில்லை.

பெரம்பலூருக்கு ஒதுக்கப்பட்ட மருத்துவக் கல்லூரி தேவையில்லை என ஜெயலலிதா கூறி அதை நிறைவேற்றவில்லை என்றார் அவர்.

மாநிலத் துணைத் தலைவர் போ. மலையாண்டி தலைமை வகித்தார். சங்க நிர்வாகிகள் ஆர். மாரிமுத்து, பி. சுந்தரராஜ், ஆர். ராஜ்குமார், ஆர். அருமைராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில், சங்கப் பொறுப்பாளர்கள் எம். தனராஜ், ஏ. மணிராஜ், ஆர். சிவக்குமார், இ. இளையராஜா, ஜி. நல்லேந்திரன், ஆர். ரவி, என். தமிழ்ச்செல்வன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

திட்டச் செயலர் பெ. வேணுகோபால் வரவேற்றார். கோட்டச் செயலர் வி. பிச்சைமுத்து நன்றி கூறினார்.

**கரும்பு டன்னுக்கு ரூ.3,500 விலை நிர்ணயிக்க வேண்டும்: மாவட்ட திமுக வலியுறுத்தல்**

கரும்பு டன்னுக்கு ரூ.3,500 என தமிழக அரசு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என திருவண்ணாமலை மாவட்ட திமுக செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. திருவண்ணாமலை, திருமஞ்சன கோபுரத் தெருவில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு, மாவட்ட அவைத் தலைவர் த.வேணுகோபால் எம்.பி. தலைமை வகித்தார்.

திமுக தணிக்கைக்குழு உறுப்பினர் கு.பிச்சாண்டி, தலைமை செயற்குழு உறுப்பினர் பெ.சு.திருவேங்கடம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழக முன்னாள் அமைச்சரும், மாவட்ட திமுக செயலாளருமான எ.வ.வேலு தீர்மானங்களை விளக்கிப் பேசினார்.

கூட்டத்தில், கரும்பு விவசாயிகள் உரம், பூச்சிமருந்து, கூலி ஆள்கள் என விலை ஏற்றம் காரணமாக அல்லல்படுகின்றனர். எனவே, தமிழக அரசு கரும்பு டன்னுக்கு ரூ.3,500 என விலை நிர்ணயம் செய்ய வேண்டும்.

மாவட்டத்தில் ஆடு, மாடுகள் கோமாரி நோய்த் தாக்குதலில் இறந்து வருகின்றன. இவ்விஷயத்தில் உரிய நடவடிக்கை எடுக்காத மாவட்ட நிர்வாகம் மற்றும் கால்நடைத்துறையை வன்மையாகக் கண்டிப்பது.

திருவண்ணாமலை மாவட்ட திமுக சார்பில் இம் மாதம் 15-ம் தேதி நடைபெறும் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டத்தில் கலந்து கொள்ள வரும் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் எ.வ.வேலு பேசுகையில், விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்குவதாக அறிவித்த தமிழக அரசு திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகளுக்கு இதுவரை எந்த நிவாரணத்தையும் வழங்காமல் ஏமாற்றி விட்டது. எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

கூட்டத்தில், நகர்மன்ற முன்னாள் தலைவர் இரா.ஸ்ரீதரன், அருணை பொறியியல் கல்லூரி நிர்வாகி எ.வ.வே.கம்பன், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.என்.அண்ணாதுரை, மாவட்டப் பிரதிநிதி டி.வி.எம்.நேரு, நகராட்சி குழுத் தலைவர் குட்டி க.புகழேந்தி, மாவட்ட இலக்கிய அணித் தலைவர் ஓ.ஏ.ஆறுமுகம், பொறியாளர் இரா.சீனுவாசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**கால்நடைகளுக்கு இன்று இலவச பல் சிகிச்சை முகாம்**

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி அறுவை சிகிச்சை மற்றும் கதிரியக்கத் துறை சார்பில் "கால்நடைகளுக்கான இலவச பல் சிகிச்சை முகாம்' திங்கள்கிழமை (அக்.7) நடைபெறுகிறது.

சென்னை வேப்பேரியில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெறும் இந்த முகாமை கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் டி.கே.எம்.சின்னையா துவக்கி வைக்கிறார். கால்நடை பராமரிப்புத் துறை செயலர் எஸ்.விஜயகுமார், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் ஆர்.பிரபாகரன் உள்ளிட்டோர் முகாமில் பங்கேற்கின்றனர்.

நாய்கள், பூனைகள், குதிரைகள் மற்றும் மாடுகளுக்கு இலவசமாக பல் பரிசோதனை மற்றும் சிகிச்சையும் அளிக்கப்பட உள்ளன. சிறந்த முறையில் பராமரிக்கப்பட்ட பல் வரிசை உள்ள விலங்குகளுக்கு பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

பற்பசை உதவியால் நாய்களின் பற்களைச் சுத்தம் செய்யும் செய்முறை பயிற்சி அளிப்பதுடன், கால்நடைகளுக்கான பற்பசை மற்றும் பல் துலக்கும் பிரஷும் வழங்கப்பட உள்ளன.

**தனிநபர் பயிர் காப்பீட்டுத் திட்டம்: மத்திய அரசுக்கு அமைச்சர் கோரிக்கை**

- 

ஆண்டுதோறும் இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்படும் விவசாயிகளைப் பாதுகாக்க தனிநபர் பயிர் காப்பீட்டுத் திட்டத்துக்கு மத்திய அரசு அனுமதி அளிக்க வேண்டும் என மாநில வேளாண் துறை அமைச்சர் எஸ்.தாமோதரன் வலியுறுத்தினார்.

சிவகங்கை மாவட்டம், கொட்டகுடியில் நறுமணப் பூங்கா திறப்பு விழாவில் அமைச்சர் பேசியதாவது: வறட்சி, வெள்ளம், புயல் என பல்வேறு இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வளமையை உருவாக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.

மாநிலத்தில் சுமார் 1.72 லட்சம் ஹெக்டேர் நிலத்தில் அன்னியச் செலாவணியை ஈட்டித் தரக்கூடிய வாசனை மற்றும் நறுமணப் பயிர்களைப் பயிரிட்டு 4.8 லட்சம் மெட்ரிக் டன் விளைவிக்கப்படுகிறது. இவ்வகையான பொருள்களுக்கு உரிய விலை கிடைக்க பல்வேறு கட்டமைப்பு வசதிகளை ஒரே இடத்தில் ஒருங்கிணைக்கும் போது விவசாயத்தில் இருமடங்கு உற்பத்தி, 3 மடங்கு வருவாய் பெறமுடியும்.

மாநிலத்தில், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் விவசாயிகளுக்கு பொருளீட்டுக் கடன் ரூ.2 லட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. தென் தமிழகத்தில் விவசாய விளை பொருள்களை சந்தைப்படுத்தும் வகையில், மதுரையில் சுமார் ரூ.80 கோடி மதிப்பீட்டில் மாபெரும் சந்தை வளாகம் அமைக்கப்பட்டு வருகிறது. ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியிலிருந்து சுமார் ரூ.127 கோடி ஒதுக்கப்பட்டு 88 நவீன கிடங்குகளை மாநில அரசு ஏற்படுத்தி வருகிறது. காய்கறி, பழம், புளி, மிளகாய், எலுமிச்சை, திராட்சை, வாழை போன்ற விளைபொருள்களுக்காக வணிக வளாகம், குளிர்சாதன வசதிகள் போன்றவற்றை தெரிவு செய்யப்படாத மாவட்டங்களில் உருவாக்க தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.35.9 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உணவு பதப்படுத்துதலை ஊக்குவிக்கும் வகையில் தேசிய உணவு பதப்படுத்துதல் இயக்கத்தின் கீழ் மத்திய, மாநில அரசுகள் மானியத்துடன் கூடிய ரூ.10.4 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

ஆண்டுதோறும் இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்படும் ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டத்தில் பயிர் காப்பீட்டுத் திட்டங்கள் அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்கும் வகையில் தனிநபர் பயிர் காப்பீட்டுத் திட்டத்தை தமிழகத்தில் செயல்படுத்த மத்திய அரசு ஒப்புதல் அளிக்க வேண்டும். தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்துக்கு இயற்கை இடர்பாடு தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளும் வகையில் போதிய நிதியை மத்திய நிதி அமைச்சர் வழங்க வேண்டும்.

பல்வேறு பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளதால் இதுபோன்ற ஏற்றுமதி பூங்காக்கள் தமிழகத்தில் அமைத்திட மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் முன்வரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**07.10.2013**

## சிதம்பரபுரத்தில் விவசாய சங்க தாலுகா மாநாடு

களக்காடு:களக்காடு அருகே சிதம்பரபுரத்தில் விவசாயிகள் சங்கம் சார்பில் தாலுகா மாநாடு நடந்தது.தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் நான்குநேரி தாலுகா பேரவை மாநாடு களக்காடு அருகே உள்ள சிதம்பரபுரத்தில் நடந்தது. இம்மாநாட்டில் துவக்க நிகழ்ச்சியாக சிதம்பரபுரம் பஸ் ஸ்டாண்டில் நிறுவப்பட்டுள்ள விவசாயிகள் சங்க தியாகிகளின் நினைவாக கல்வெட்டை இந்திய கம்யூ., கட்சியின் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் நல்லகண்ணு திறந்து வைத்தார். மாநாட்டிற்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் பெரும்படையார் தலைமை வகித்தார். விவசாய சங்க மாவட்டத் தலைவர் கிருஷ்ணன், மாவட்ட செயலாளர் கசமுத்து, தாலுகா செயலாளர் சுப்பையா, இந்திய கம்யூ., மாவட்ட செயலாளர் சண்முகவேல், துணைச் செயலாளர் சேவியர், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் சுகுமாரன், இந்திய கம்யூ., களக்காடு ஒன்றிய செயலர் பாலசுந்தரம், துணைச்செயலாளர் லெனின் முருகானந்தம், நகரச்செயலர் முத்துவேல், சிதம்பரபுரம் ஆத்திமுத்து உள்பட பலர் கலந்து கொண்டுபேசினர்.மாநாட்டில் காட்டுப்பன்றிகளால் பயிர்களை சேதமடைவதை தவிர்க்கும் வகையில் மத்திய, மாநில அரசுகள் வனவிலங்குகள் பாதுகாப்புப் பட்டியலில் இருந்து காட்டுப்பன்றியை நீக்கி உத்தரவிட வேண்டும். உரவிற்பனையை தனியாரிடம் வழங்காமல் அரசே ஏற்று நடத்த வேண்டும். விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும். நான்குநேரி தாலுகாவில் உள்ள அனைத்து குளங்கள் மற்றும் கால்வாய்களை உடனடியாக தூர்வார வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## வறட்சியால் ஆட்டு "கிடை' தொழில் முடக்கம்

சின்னாளபட்டி : வறட்சியால், வயல்களில் விவசாய பணிகள் மட்டுமன்றி,"ஆட்டு கிடை' போடும் தொழிலும் முடங்கியுள்ளது.

விவசாயம் காலங்களில், விளைநிலங்களுக்கு இயற்கை உரமிட, ஆட்டு "கிடை' அமர்த்துவது வழக்கம். அதன்படி, குறைந்தபட்சம் 250 ஆடுகள், ஒரு வயலில் தங்க வைக்கப்படும். தொடர்ந்து பல நாட்கள் வயலில் தங்கும் ஆடுகளின் புழுக்கைகள், இயற்கை உரமாகிவிடும். இதற்கு, வயல் உரிமையாளரிடம், நாள் ஒன்றுக்கு ரூ.400 வரை, கட்டணம் வசூலிக்கப்படுகிறது. விவசாயிகள், சாகுபடிக்கு முந்தைய காலங்களில், 6 மாதம் வரை கூட, தங்கள் நிலங்களில் "கிடை' அமர்த்துவர். தற்போது, மழையின்மையால், விவசாய பணிகள் மட்டுமன்றி, "கிடை' அமர்த்துவதும் முடங்கியுள்ளது.பெரும்பாலும், ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்தவர்களே "கிடை' அமர்த்தும் தொழில் செய்து வருகின்றனர். இதற்காக, செம்மறி,மேச்சேரி, அடிக்கரிச்சான் உள்ளிட்ட பல வகை ஆடுகளை வளர்த்து வருகின்றனர். இவர்கள், ஊர் ஊராக சென்று, கிடை அமர்த்துவர். அதற்கு வாய்ப்பு இல்லாத காலத்தில், குறிப்பிட்ட ஒரு இடத்தில் ஆடுகளை தங்க வைப்பதை,"தொழு' என்கின்றனர். அங்கு அன்றாடம் தேங்கும் புழுக்கையை சேகரித்து,கிலோ ரூ. 80 வரை கேரள வியாபாரிகளுக்கு விற்கின்றனர்."கிடை' அமர்த்தும் ராஜு கூறியதாவது: "கிடை' அமர்த்தும்போது ஆடுகள் சுத்தமாக இருக்கும். தொழுவில் இருந்தால் அழுக்கடைந்து விடும். அதேசமயம், தொழுவில் அடைத்து, புழுக்கை சேகரித்து விற்றால், "கிடை' போடுவதை விட லாபம் இருக்கும். தற்சமயம்,நிலவும் வறட்சியால்,"கிடை' போடுவது முடங்கியுள்ளது," என்றார்.

## வெட்டப்படும் தென்னைக்கு நஷ்டஈடு வளர்ச்சி வாரியம் முன்வருமா

கம்பம் : தேனி மாவட்டத்தில் நோயில் பாதிக்கப்பட்டு, வெட்டப்படும் தென்னை மரங்களுக்கு நஷ்ட ஈடு தர, தென்னை வளர்ச்சி வாரியம் முன்வர வேண்டும், என

விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.தேனி மாவட்டத்தில் அதிக பரப்பில் சாகுபடி செய்யப்படும் பயிர்களில் தென்னை முக்கிய இடத்தை பிடிக்கிறது. சுமார் 10 ஆயிரம் ஹெக்டேரில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. தென்னைக்கு, அதிக அளவில் உரம், தண்ணீர் தேவைப்படாது. ஒரு மாதத்திற்கு ஒரு முறை தண்ணீர் மற்றும் உரம் வைத்தால் போதுமானது.ஆனால் தென்னையின் மட்டை, சோகை, இளநீர், தேங்காய் என அனைத்து பாகங்களும், விவசாயிகளுக்கு வருவாயை தருகின்றன.

இந்நிலையில், கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக தென்னையில் "ஈரியோபைடு', கேரள வாடல் நோய் தாக்கி தென்னையை பாடாய் படுத்தி வருகிறது. இலைகள் மஞ்சள் நிறமாக மாறி, படிப்படியாக காய்க்கும் திறனை இழந்து விடுகிறது. காற்றின் மூலம் பரவும் இந்த நோயை கட்டுப்படுத்த மருந்துகள் இல்லை. நோய் பாதித்த மரங்களை வெட்டி எரித்து விடுவது தான் சிறந்தது.

எனவே கடந்த சில ஆண்டுகளுக்கு முன் கொச்சியில் உள்ள மத்திய அரசின் தென்னை வளர்ச்சி வாரியம், வெட்டப்படும் ஒவ்வொரு மரத்திற்கும், நஷ்ட ஈடாக 250 ரூபாய் தந்தது. மேலும் புதிய மரங்கள் நடவு செய்ய மானியம் வழங்கியது. ஆனால், கொஞ்ச காலத்திலேயே அந்த திட்டத்தை நிறுத்திக் கொண்டது. இப்போது மீண்டும், மாவட்டத்தின் பல பகுதிகளில் தென்னை மரங்கள் கேரள வாடல் நோயால் பாதிக்கப்பட்டு, விவசாயிகளால் வெட்டப்பட்டு வருகிறது.ஆனால் தென்னை வளர்ச்சி வாரியம் மரத்திற்குரிய நஷ்ட ஈடு தரவில்லை.

தென்னை விவசாயிகள் கூறுகையில்,""நோய் பாதித்த மரங்ளை வெட்டுவதற்கு மரத்திற்கு 250 ரூபாய் தரப்பட்டது. தற்போது அந்த நஷ்ட ஈட்டுத் தொகையை ஒரு மரத்திற்கு 500 ரூபாய் ஆக உயர்த்தி வழங்க தென்னை வளர்ச்சி வாரியம் முன்வர வேண்டும்" என்றனர்.

## சம்பங்கி சாகுபடியில் விவசாயிகள் நல்ல வருவாய் கிடைப்பதால் ஆர்வம்

ராமநாதபுரம் : ராமநாதபுரம் மாவட்டத்தில் முதன்முறையாக நல்ல வருவாய் தரும் சம்பங்கி பூ சாகுபடி செய்வதில், விவசாயிகள் ஆர்வம் காட்டியுள்ளனர்.

ராமநாதபுரம் கடலோர உவர் ஆராய்ச்சி நிலையத்தின் வேளாண்மை அறிவியல் மைய உதவி பேராசிரியர் ராஜஸ்ரீ, கோவை வேளாண் பல்கலை கழக மலரியல் துறையிலிருந்து சம்பங்கி பூ கிழங்குகளை எடுத்து வந்து, இங்கு சோதனையாக பயிரிட்டதில் நல்ல விளைச்சல் கண்டார்.

இதை தொடர்ந்து, இவரது ஆலோசனையின்படி மாவட்டத்தில் பல பகுதிகளில், சம்பங்கி விவசாயம் செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்ட துவங்கியுள்ளனர்.

உதவி பேராசிரியர் ராஜஸ்ரீ கூறியதாவது: ராமநாதபுரம் மாவட்டத்தில், இதுவரை மல்லிகை மட்டுமே சாகுபடி செய்து வந்தனர். முதன்முறையாக அதிக வருமானம் தரக்கூடிய தற்போது மதுரை, திண்டுக்கல், விருதுநகர் பகுதிகளில் மட்டுமே விளையக்கூடிய சம்பங்கியை, ராமநாதபுரம் வேளாண்மை அறிவியல் மையத்தில் மாதிரியாக சாகுபடி செய்ததில் நல்ல பலன் கண்டுள்ளோம்.

"சிரிங்கார், பிரஜ்வால், அர்கா நிரத்தாரா, சுவாசினி, வைபவ்' என ஐந்து வகை சம்பங்கிகளில், "பிரஜ்வால்,' அதிக எடை உள்ளதால், லாபமும் அதிகம் கிடைக்கும். இதையே விவசாயிகள் பெரிதும் விரும்புகின்றனர்.

ஆண்டிற்கு ஒரு எக்டேரில் 17 முதல் 18 டன் வரை மகசூல் கிடைக்கும். தற்போது பரமக்குடி, கமுதி, ஆர்.எஸ்.மங்கலம் பகுதியிலிருந்து, விவசாயிகள் மாதிரிக்கு வாங்கி சென்று பயிரிட்டுள்ளனர். இவர்களது விளைச்சலை கண்டு, அடுத்தாண்டு அதிக விவசாயிகள், சம்பங்கி விவசாயத்தில் ஈடுபட வாய்ப்பு உள்ளது. இதை சாகுபடி செய்யும் முறைகள் குறித்து, கடலோர உவர் ஆராய்ச்சி மையத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இதையடுத்து, கனகாம்பரம் பயிரிடும் முயற்சியில் இறங்கியுள்ளோம், என்றார்.

## திருந்திய நெல் சாகுபடிக்கு வேளாண்துறை வேண்டுகோள்

காரைக்குடி : சாகுபடிக்கு தயாராக உள்ள விவசாயிகள், திருந்திய நெல் சாகுபடி செய்து விளைச்சலை பெருக்க சாக்கோட்டை ஒன்றிய வேளாண்மை உதவி

இயக்குனர் மணிவண்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.அவர் விடுத்துள்ள அறிக்கை: திருந்திய நெல்சாகுபடியில், குறைந்த அளவு விதை, தழைச்சத்தின் தேவை குறைவு, குறைந்த அளவு நீர் கொண்டு விவசாயம் செய்யப்படுகிறது. களைக்கருவிகள் மூலம், மடக்கி உழுவதால் அவை உரமாகின்றன. கோனோ களை எடுப்பான், ரோட்டரி களை எடுப்பான் கொண்டு, களை எடுப்பதால், மண் நன்றாக புரட்டப்பட்டு நல்ல காற்றோட்டம் ஏற்படுகிறது. இடைவெளியால், வேர் போட்டியின்றி நன்றாக வளர்கிறது.

மண்ணின் நுண்ணுயிர்கள் ஊக்குவிக்கப்படுகிறது.ஒரு குத்தில் அதிக பட்சமாக 35 முதல் 40 கதிர்களும்,சராசரியாக 25 முதல் 28 தூர்களும் கிடைக்கிறது.நீர் கட்டுவதால், 300 முதல் 400 மி.மீ., தண்ணீர் சேமிக்கப்படுகிறது. இதன் மூலம் ஹெக்டேருக்கு 10 ஆயிரம் முதல் 12 ஆயிரம் வரை நிகர லாபம் கிடைக்கிறது.எனவே விவசாயிகள்,திருந்திய நெல் சாகுபடியை செய்து பயன் அடையலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## கால்நடைகளுக்கு கால், கோமாரி நோயை தடுக்க தடுப்பூசி: அக்.,20 கடைசி

விருதுநகர் : தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கிராமம் மற்றும் குக்கிராமங்களில் கால்நடைகளுக்கு, கால் மற்றும் வாய் கோமாரி நோய் தாக்காமல் இருக்க தடுப்பூசி போடும்பணி அக்., 20 வரை நடக்கிறது.

கால் மற்றும் வாய் கோமாரி நோய் கலப்பின மாடுகளை அதிகம் தாக்குகிறது. இந்நோயால் இறப்பு குறைவாக இருந்தபோதிலும், கறவை மாடுகளில் பால் உற்பத்தி குறைவு, சினை பிடிப்பு தடை, இளங்கன்றுகளின் இறப்பு, எருதுகளின் வேலை திறன் குறைவு போன்ற பாதிப்பால் கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதார இழப்பு ஏற்படுகிறது.

இந்நோய், குறிப்பாக குளிர் மற்றும் பனிக்காலம், நோய் பாதிக்கப்பட்ட இடங்களில் இருந்து வாங்கி வரப்பட்ட கால்நடைகள், சுகாதாரமற்ற கால்நடை வளர்ப்பு மற்றும் தடுப்பூசி போடாமல் இருத்தல் போன்ற காரணத்தால் காற்றின் மூலம் பரவும் தன்மை கொண்டது. இந்நோய் பாதிக்கப்பட்ட மாடுகளின் சிறுநீர்,

பால், உமிழ்நீர், சாணம் ஆகியவற்றால் மற்ற கால்நடைகளுக்கும் பரவுகிறது. இதை தடுக்க கால்நடை வளர்ப்போருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த, கிராமங்களில் கிராம சபை கூட்டத்தில் தடுப்பூசி போடும் தேதி குறிப்பிடப்பட உள்ளது. இதில் அனைவரும் கலந்து கொண்டு, குறிப்பிட்ட நாளில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டு கொள்ளலாம். அக்., 20 வரை தடுப்பூசி போட்டு கொள்ள கால நிர்ணயம் செய்துள்ளது, கால்நடை பராமரிப்பு துறை.

## வாழைத்தார் அறுவடை உத்திகள் வேளாண் வணிக துணை இயக்குநர் தகவல்

விருதுநகர் : விருதுநகர்மாவட்டத்தில் பரவலாக வாழை பயிரிடப்பட்டு அறுவடை செய்யப்படுகிறது. இது ஒரு பணப்பயிர். வாழைக்காய்/ பழத்தின் விலை காய்களின் முதிர்ச்சி, பழத்தின் நிறம் இவைகளைப்பொறுத்தே அமைகிறது. முதிர்ச்சியடைந்த திரட்சியான காய்கள் நல்ல விலைக்கு விற்பதற்கு, அதன் தரம் சிறந்துவிளங்க, கீழ்க்கண்ட, அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி முறைகளை விவசாயிகள் கடைபிடிக்க வேளாண் வணிகதுணை இயக்குநர் முத்துமுனியாண்டி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை: வாழை பொதுவாக காயாக உபகோயப்படுத்தினாலும் அல்லது பழத்திற்காக உபயோகப்படுத்தப்பட்டாலும் முதிர்ச்சியமடைந்த பின்பே, அதன் குலைகளை அறுவடை செய்யவேண்டும். வாழைத்தா ார்கள் அறுவடை செய்யும் காய்கள் நன்கு திரட்சியடைந்து 80 முதல் 90 சதவீதம் வரை முதிர்ச்சியடைந்திருக்க வேண்டும். தார்களை அறுவடை செய்து நீண்ட தூரம் அனுப்பவேண்டியிருந்தால் 75 சதவீத முதிர்ச்சியில் அறுவடை செய்ய வேண்டும். வாழைத்தார்களை அறுவடை செய்ய உரிய உத்திகளைக்கையாண்டு முதல் சீப்பிலிருந்து இடைவெளிவிட்டு குலைக்காம்பு மரத்திலிருந்து வளையும் இடத்தில் அறுத்து எடுக்க வேண்டும். அறுவடையின்போது காய்களின் மீது வெட்டுப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

தார்களைபோதிய அளவு வாழை மட்டைகளை ஒவ்வொரு அட்டிகளுக்கும் இடையில் பரப்பி காய்கள் அடிபட்டு சேதம் அடையாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். பொதுவாக காய்கள் அடிபடாத வகையில் மிகவும் பாதுகாப்பாக கையாள்தல் மற்றும் எடுத்துச்செல்ல வேண்டும். தார்களை வாழைச் சருகுகளால்

மூடி கட்டுதல்(கோட்டை கட்டுதல்) மிகவும் சிறந்த முறையாகும். வாழைக்குலைகள் பழுக்க வைக்க கையாளும் முறையை தங்களின் அருகிலுள்ள சந்தையைச் சார்ந்த ஊரிலேயே கையாளப்பட வேண்டும். வாழைக்காய்களைள வெளியூர் சந்தைகளுக்கு அனுப்புவதற்கு தார்களில் சீப்புகளாக காய்கள் சேதமடையாமல் வெட்டி எடுத்து "பிளாஸ்டிக் கிரேட்'களில் வைத்து அனுப்பலாம். இதனால், சேதாரம் தவிர்க்கப்படும்.

காய்களை பழுக்க வைப்பதற்கு எத்திலீன்வாயு வணிக ரீதியான 200 பிபிஎம் பயன்படுத்துவது மிகவும் நல்லது. இம்முறையில் காய்கள் முழுவதும் ஒரே நேரத்தில் வெளிர் மஞ்சள் நிறமடைகின்றன. இதனால், காய்கள் ஒரே சீராக பழுக்கும். விற்பனைக்கு காலதாமதம் ஆகும் பட்சத்தில் அறுவடை செய்த தார்களை இருப்பு வைக்கும் அறைகளின் வெப்பநிலையைக்குறைக்க, ஈரச்சாக்குகளை அறைகளின் சுவர் ஓரங்களில் தொங்கவிடலாம். கீற்றுக்கொட்டகையில் சேமித்து வைக்கலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தேயிலை வரத்து அதிகரித்தும் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கவலை

குன்னூர்:குன்னூர் தேயிலை மையத்தில், தேயிலை வரத்து அதிகரித்தும், விலை வீழ்ச்சி தொடர் வதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

குன்னூர் தேயிலை ஏல மையத்தில் விற்பனை எண் 40க்கான ஏலம் நடந்தது. மொத்தம் 16.12 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. சி.டி.சி., ரகத்தில் அதிகபட்சம் கிலோ 200, ஆர்தோடக்ஸ் ரகத்தில் அதிகபட்சம் கிலோ 221 ரூபாய்க்கு தேயிலை தூள் விற்கப்பட்டது. விற்கப்பட்ட அனைத்து ரக தேயிலையின் விலையும், கிலோ 2 ரூபாய் வீழ்ச்சியடைந்தது.

குன்னூர் தேயிலை ஏல மையத்தில், கடந்த வார ஏலம் மூலம் 9.37 கோடி ரூபாய், இந்த வாரம் 8.99 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது. கடந்த ஒரு வார இடைவெளியில், 38 லட்ச ரூபாய் வருமானம் குறைந்துள்ளது. கடந்த வாரம் விற்கப்பட்ட தேயிலை தூளின் சராசரி விலை கிலோ 88.59 ரூபாய், இந்த வாரம் 86.89 ரூபாயாக இருந்தது.

வட இந்திய தேயிலை ஏல மையங்களில், குன்னூர் ஏல மையத்தை விட குறைந்த

விலைக்கு தேயிலை கிடைப்பது தான், உள்ளூர் வர்த்தகம் அடிபட காரணம், என தேயிலை வர்த்தகர்கள் கூறுகின்றனர். தவிர, கடந்த இரு வாரங்களுக்கு முன்பு தான், குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்கத்தின் பொன்விழா கொண்டாட்டங்கள் நடந்தன.

வெளிமாநிலம் மற்றும் நாடுகளில் இருந்து ஏராளமான வர்த்தகர்கள் பங்கேற்று, நீலகிரி தேயிலை தூளின் தரத்தை தெரிந்து சென்றுள்ள நிலையில், தேயிலை வர்த்தகம் களைகட்டும் என, எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தொடரும் இந்த விலை வீழ்ச்சி விவசாயிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

## வெள்ளாடு வளர்ப்புபயிற்சிக்கு அழைப்பு

கரூர்: பண்டுதகாரன்புதூர் கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் வரும் 9ம் தேதி, ஒருங்கிணைந்த முறையில் பட்டுப்பூச்சி வளர்ப்புடன் கூடிய வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி நடக்கிறது.பயிற்சியில் பட்டு பூச்சி வளர்ப்புடன், வெள்ளாடுகளை இணைத்து வளர்க்கும் முறை, அதற்கேற்ற வீட்டமைப்பு, இனப்பெருக்கம், தீவன பராமரிப்பு, நோய் தடுப்பு முறைகள் மற்றும் பண்ணை பொருளாதாரம் ஆகிய தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளது. பயிற்சியில் பங்கேற்க விருப்பம் உள்ளவர்கள் 9 ம் தேதி காலை 10 மணிக்கு பயிற்சி மையத்துக்கு வரவேண்டும். மேலும், விபரங்களுக்கு 04324-294335 என்ற ஃபோன் எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.இத்தகவலை மைய இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர் அகிலா தெரிவித்துள்ளார்.

## துவரை சாகுபடியில் புதிய தொழில்நுட்பம் அதிக மகசூல் பெற விவசாயிகளுக்கு அறிவுரை

விழுப்புரம்:துவரை சாகுபடி முறையில் புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டுமென வேளாண் உதவி இயக்குனர் செல்வசேகர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வேளாண் உதவி இயக்குனர் செல்வசேகர் விடுத்துள்ள அறிக்கை: பயறு வகை பயிர்களில் அதிக புரதச்சத்து நிறைந்தது துவரை. இப்பயிர் சாகுபடி நேரடி விதைப்பு செய்யும் முறை பல பகுதிகளில் உள்ளது. கோலியனூர் வட்டாரத்தில் கடந்தாண்டு பாலித்தீன் பைகளில் நாற்று விட்டு நடவு செய்யும்

முறை துவங்கியது.

இந்த நடவு முறையில் ஏக்கருக்கு சுமார் 500 கிலோ கூடுதல் மகசூல் கிடைக்கிறது. நேரடி விதைப்பு மூலம் ஏக்கருக்கு 600 முதல் 800 கிலோ மட்டுமே மகசூல் எடுக்க முடியும். பாலித்தீன் பை நாற்று வளர்த்து நடவு செய்யும் போது, ஏக்கருக்கு சுமார் 1250 கிலோ மகசூல் எளிதாக எடுக்க முடிகிறது.

அரசு வேளாண்மை துறையில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் துவரை நாற்றுவிட்டு நடவு முறை சாகுபடி செய்ய ஏக்கருக்கு 3 ஆயிரம் ரூபாய் இடுபொருள் மானியம் வழங்கப்படுகிறது. துவரை பயிருக்கு சொட்டு நீர்பாசனம் அமைக்க சிறு, குறு விவசாயிகளுக்கு நூறு சதவீதம், பெரிய விவசாயிகளுக்கு 75 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.

இதை பயன்படுத்தி பானாம்பட்டு, குருமன்கோட்டை, மேல்பாதி, தொடர்ந்தனூர், நரையூர், காகுப்பம், தென்னமாதேவி, செங்காடு, சோழகனூர், சோழாம்பூண்டி ஆகிய கிராமங்களில் 250 ஏக்கர் பரப்பளவில் செயல்விளக்க தளைகள் அமைக்க விதை விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகள் துவரை நாற்றுவிட்டு நடவு செய்து அதிக மகசூல் பெற வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இவ்வாறு வேளாண் உதவி இயக்குனர் செல்வசேகர் தெரிவித்துள்ளார்.

## திண்டிவனம் பகுதியில் வெங்காயம் விற்பனை "ஜோர்'

திண்டிவனம்:திண்டிவனம் பகுதியில் விளைந்துள்ள சின்ன வெங்காயத்தை சாலை ஓரம் போட்டு விவசாயிகள் விற்பனை செய்து வருகின்றனர்.

திண்டிவனம் அடுத்த எடைப்பாளையம் பகுதியில் உள்ள விவசாயிகள் கடந்த இரண்டு மாதத்திற்கு முன் புதுச்சேரி மாநிலம் தேங்காய்திட்டு பகுதியில் வெங்காய நாற்றுகளை வாங்கி வந்து பயிர் செய்தனர். வெங்காய அறுவடை செய்ய ஒரு வாரம் இருக்கும் போது மழை பெய்ததால் வெங்காய தாள்கள் அழுகின.

இதனால் இந்த ஆண்டு வெங்காய விளைச்சல் பாதிக்கப்பட்டது. குறைந்த அளவே வெங்காயம் உற்பத்தி ஆனதால் விவசாயிகள் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யாமல் உள்ளூர் பகுதியில் உள்ள பைபாஸ் சாலை ஓரங்களில் கடை போட்டு கிலோ ரூபாய் 30க்கு விற்பனை செய்து வருகின்றனர்.

### 800 மூட்டை கடலைரூ.8 லட்சத்துக்கு ஏலம்

சேலம்: சேலம் பள்ளப்பட்டி வேளாண் கூட்டுறவு சங்கத்தில், 800 மூட்டை நிலக்கடலை, எட்டு லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

சேலம், பள்ளப்பட்டியில், வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கம் உள்ளது. இங்கு, செவ்வாய்கிழமை தோறும் மஞ்சள் ஏலமும், தினசரி, நிலக்கடலை ஏலமும் நடக்கும். பனமரத்துப்பட்டி, அக்ரஹாரம், வாழப்பாடி, அயோத்தியாபட்டணம், வலசையூர், ஓமலூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகள், நிலக்கடலையை விற்பனைக்கு கொண்டு வருவர்.நேற்று முன்தினம், பனமரத்துப்பட்டி, மகுடஞ்சாவடி உள்ளிட்ட பகுதியில் இருந்து, 800 மூட்டை நிலக்கடலை வந்தது. கொங்கணாபுரம், சேலம், தாராபுரம் உள்ளிட்ட பகுதி வியாபாரிகள், கடலையை பார்வையிட்டு ஏலம் எடுத்தனர். அதன்படி, ஈரக்கடலை அதிகபட்சமாக, 60 கிலோ மூட்டை, 1,510 ரூபாய்க்கும், குறைந்தபட்ச விலையாக, 1,164 ரூபாய்க்கும் ஏலம் போனது. 800 மூட்டைகளும், எட்டு லட்சம் ரூபாயக்கு ஏலம் போனது. கடலை கொண்டு வந்த விவசாயிகள், 100 பேருக்கு, உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. நவம்பர் மாதம் இறுதி வரையில், கடலை ஏலத்துக்கு வரும். கடலை பயிரிட்ட விவசாயிகளும், வியாபாரிகளும், பள்ளப்பட்டி வேளாண் சங்கத்தின் மூலம் பயன்பெறலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

### மாட்டு தீவன ஊழல் வழக்கு தீர்ப்பு தமிழ்நாடு கள் இயக்கம் வரவேற்பு

நாமக்கல்: "பீஹார் மாநிலத்தில் நடந்த, மாட்டுத் தீவன ஊழல் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பை வரவேற்கிறோம்' என, ஆலோசனை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.தமிழ்நாடு கள் இயக்கத்தின் சார்பில், நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், நாமக்கல்லில், நேற்று நடந்தது. ஒருங்கிணைப்பாளர் நல்லசாமி தலைமை வகித்தார்.கூட்டத்தில், லோக்சபா தேர்தல் அறிவிப்புக்கு முன், கள்ளுக்கான தடையை நீக்க வேண்டும். பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வில் இருந்து, நாட்டை காப்பாற்ற, மாற்று எரிபொருளாக எத்தனால்

பயன்படுத்த வேண்டும். வரும் லோக்சபா தேர்தலில், கள் இயக்கம் சார்பில், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள, 40 தொகுதிகளிலும் போட்டியிடப்படும். ஓட்டுப்பதிவு செய்ய விருப்பம் இல்லாத வாக்காளர்களின் முடிவை பதிவு செய்ய, ஓட்டுப்பதிவு இயந்திரத்தில், அதற்கென தனி பட்டன் அமைக்க வேண்டும் என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பை, தேர்தல் ஆணையம் அமல்படுத்த வேண்டும்.பீஹார் மாநில மாட்டுத் தீவன ஊழலில் சிக்கிய லாலுபிரசாத் உள்ளபட, 45 பேர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு, சிறையில் அடைத்ததை வரவேற்கிறோம்.குற்றப்பின்னணி உள்ள எம்.பி., எம்.எல்.ஏ.,க்களின் பதவி பறிப்பு மற்றும் தேர்தலில் போட்டியிட அனுமதிக்க மறுப்பை அமல்படுத்த வேண்டும். பெட்ரோலிய பொருட்களின் விலை ஏற்றத்திற்கு ஏற்ப, விவசாய பொருட்களின் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.கள் இயக்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## மரவள்ளி சாகுபடியில் அதிக லாபம்பெற விவசாயிகளுக்கு ஆலோசனை

ராசிபுரம்: "மரவள்ளியில் மாவு பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தி, அதிக லாபம் பெற, "புரோபனோபாஸ்' என்ற, மவுப் பூச்சிக்கொல்லியை பயன்படுத்த வேண்டும்' என, ராசிபுரம் தோட்டக்கலை உதவி இயக்குனர் மோகன் விஜயகுமார் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:

ராசிபுரம் அடுத்த பட்டணம், வடுகம், ஆர்.புதுப்பாளையம், அத்தனூர், மசக்காளிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில், விவசாயிகள், 500க்கும் மேற்பட்ட ஏக்கரில் மரவள்ளி சாகுபடி செய்துள்ளனர். மரவள்ளியில், இலைகளின் அடிப்பாகம் மற்றும் காம்பு இடுக்குகளில், மாவுப்பூச்சி காணப்படும்.இந்த பூச்சிகள் தாக்குதலால், பயிர்கள் இலை உருமாறி சிறுத்து காணப்படும். இதனை தடுக்க, வயல்களில் களையின்றி வைத்துக்கொள்ள வேண்டும். பாதிப்பு மிக குறைவாக இருந்தால், இலை தண்டுகளை பாலித்தின் பைகளில் சேகரித்து எரிக்க வேண்டும்.பின், 0.2 சதம் புரோபனோபாஸ் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில்,

இரண்டு மில்லி வீதம், ஏக்கருக்கு, 200 லிட்டர் மருந்து கரைசலை, செடியின் அடிக்கட்டை, தண்டு ஆகிய பகுதியில் நனையும்படி அடிக்க வேண்டும். முதல் தெளிப்பில் இருந்து, பத்து நாட்கள் கழித்து, ரோகர் மருந்தை, ஒரு லிட்டர் தண்ணீரில், மூன்று மில்லி வீதம், வேப்பம் எண்ணெயுடன் கலந்து தெளிக்க வேண்டும்.மாவுப்பூச்சியை உயிரியல் முறையில் கட்டுப்படுத்த, ஏத்தாப்பூர் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையம், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி, வேளாண் அறிவியல் ஆராய்ச்சி நிலையங்களில் பதிவு செய்து ஒட்டுண்ணிகளை பெற்று வயலில் விடலாம். ஒட்டுண்ணிகளை வயலில் விட்ட பின் பூச்சிக்கொல்லிகளை தெளிக்கக் கூடாது.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## உழவர்சந்தை முன் வியாபாரிகள் ஆக்கிரமிப்புசிறு விவசாயிகள், பொதுமக்கள் கடும் அவதி

நாமக்கல்: உழவர் சந்தை முன் ஆக்கிரமித்து சிறு வியாபாரிகள் கடை விரித்துள்ளதால், பொதுமக்கள், விவசாயிகள் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகின்றனர். அவர்களின் நலனை கருத்தில் கொண்டு, ஆக்கிரமிப்பு செய்துள்ள கடைகளை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாமக்கல் கோட்டைச்சாலையில், உழவர் சந்தை உள்ளது. இங்கு, சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள், தங்கள் விளை நிலத்தில் சாகுபடி செய்த காய்கறி, கீரை வகைகளை அறுவடை செய்துவந்து, விற்பனை செய்கின்றனர். இடைத்தரகர் இன்றி, நேரடியாக விற்பனை செய்வதால், விவசாயிகளுக்கு கணிசமாக லாபமும், பொதுமக்களுக்கு குறைந்த விலையில் காய்கறிகளும் கிடைத்து வருகிறது.அதனால், தினமும் ஏராளமான மக்கள், உழவர் சந்தைக்கு வந்து, தேவையான காய்கறி, கீரைகளை வாங்கிச் செல்கின்றனர். அதன் காரணமாக, உழவர் சந்தையில் கூட்டம் அலைமோதும்.இந்நிலையில், உழவர் சந்தைக்கு செல்லும் வழியை அடைத்தபடி, சிறு வியாபாரிகள் கடை விரித்து, விற்பனை செய்வதை வழக்கமாக கொண்டுள்ளனர். அவர்கள், விற்பனையை

மட்டுமே கருத்தில் கொண்டு செயல்படுவதால், உழவர்சந்தைக்கு வரும் விவசாயிகள், பொதுமக்கள் உள்ளே செல்ல வழியில்லாமல் அவதிப்படுகின்றனர்.இது குறித்து அவர்களிடம் கேட்டால், அவர்களை ஆவேசமாக திட்டுவதும், சகட்டு மேனிக்கு வசை பாடுவதையும் வழக்கமாக கொண்டுள்ளனர். அப்போது, பொதுமக்களுக்கும், வியாபாரிகளுக்கும் வாய் தகராறு ஏற்படுவதை, நாள்தோறும் இங்கு காணலாம். வேறு வழியின்றி, மக்களும் ஒதுங்கிச் செல்லும் நிலை நீடித்து வருகிறது."பல்வேறு தரப்பினரின் நலனை கருத்தில் கொண்டு, உழவர் சந்தை முன் ஆக்கிரமித்து கடை விரித்துள்ள சிறு வியாபாரிகளை அப்புறப்படுத்தி, அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் கடை விரித்து வியாபாரம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, கோரிக்கை எழுந்துள்ளது.

### கால்நடையை தனித்து வைத்து கண்காணிக்கணும்

நாமக்கல்: ""பொருளாதார இழப்புகளை தவிர்க்க, கால்நடைகளை தனித்து வைத்து கண்காணிக்க வேண்டியது அவசியம்," என, கால்நடை மருத்துவமனை டாக்டர் தெரிவித்தார்."வருமுன் காப்பதே சிறந்தது' என்பது முன்னோர் மொழி. அதற்கேற்ப, நாமும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டால், நோய் பரவுவதையும், அதனால் ஏற்படும் பொருளாதார இழப்புகளையும் தவிர்க்கலாம். அதற்கு, தடுப்பூசி போடுதல், விலங்குகளின் வழித்தடங்களை சுத்தமாக வைத்திருத்தல், புதிதாக வாங்கப்பட்ட கால்நடைகளை தனித்து வைத்து கண்காணித்தல், போன்ற பல வழிமுறைகள் உள்ளன.அவற்றுள் பல வழிமுறைகள் பெயரளவில் பின்பற்றப்பட்டாலும், மக்களிடம் விழிப்புணர்வு இல்லாமல் இருக்கும் ஒன்று, தனித்து வைத்து கண்காணித்தல் முறையாகும். கால்நடைகளை தனித்து வைத்து கண்காணித்தல் என்பது, தொன்று தொட்டு விலங்குகளிடம் நோயினைக் கட்டுப்படுத்த, முன்னோர்கள் பின்பற்றி வந்த வழிமுறையாகும்.இம்முறையில், தோற்ற அளவில் நலமாக உள்ள, தொற்றுநோய் கொண்டுள்ள அல்லது கொள்ள

வாய்ப்புள்ள விலங்குகள், பிற விலங்குகளிடம் இருந்து, குறிப்பிட்ட கால அளவு பிரித்து வைக்கப்படுகின்றன. இம்முறை, தொற்று நோய் பரவல் உள்ள ஒரு நாட்டில் இருந்து நம் நாட்டுக்கு இறுக்குமதி செய்யப்படும் விலங்குகளிடம் நோய் தாக்கம் உள்ளதா என்பதை அறிய பெரிதும் உதவுகிறது.தனித்து வைத்து கண்காணித்தல் காலமானது, நோய்க்கிருமியின் நுண்மப்பெருக்கக் காலம் மற்றும் விலங்குகள் தொற்று நோயில் இருந்து குணமடையும் காலம் போன்றவற்றை பொருத்து மாறுபடும்.நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய டாக்டர் ரமேஷ் சரவணகுமார், மாணவர் கார்த்திகேயன் ஆகியோர் கூறியதாவது:புதிதாக வாங்கப்படும் கால்நடைகள், எந்தவகையில் பாதிக்கப்பட்டுள்ளது என்பது வெளிப்படையாக தெரியாது. அதனால், அவற்றை குறிப்பிட்ட நாட்கள் வரை தனித்து வைத்திருந்து, கண்காணிக்க வேண்டியது அவசியம். அதற்காக, சர்வதேச நோய்க்கிளர்ச்சி கண்காணிப்பு மையம், சில பரிந்துரைகளை செய்துள்ளது.அதன்படி, மாட்டினத்தை தாக்கும் வெக்கை நோய், 21 நாட்கள், மாட்டின நுரையீரல் அழற்சி தொற்று நோய், 180 நாட்கள், பித்தப்பை நோய், 100 நாட்கள், காசநோய், எலும்புருக்கி நோய் மூன்று மாதம், தொண்டை அடைப்பான் நோய், 28 நாட்கள், மாட்டின மேல் மூச்சுக்குழல் தொற்று நோய், 30 நாட்கள்.செம்மறி ஆடு மற்றும் வெள்ளாட்டை தாக்கும் அம்மைநோய், 21 நாட்கள், நீலநாக்கு நோய், 40 நாட்கள், நுரையீரல் அழற்சி தொற்று நோய், 180 நாட்கள், மூச்சுக்குழல் அழற்சி தொற்று நோய் மூன்று முதல் ஆறு வாரம், கோழியினத்தை தாக்கும் காலரா, 14 நாட்கள், டைபாய்டு, 28 நாட்கள், வெள்ளைக் கழிச்சல், 21 நாட்கள்.அதேபோல், குதிரை, நாய், வரிக்குதிரை போன்ற விலங்குகளை தாக்கும் நோய்க்கு ஏற்ப, குறிப்பிட்ட நாட்கள் தனித்து வைத்து கண்காணிக்க வேண்டும். நடைமுறையில், வெறிநோயைத் தவிர மற்ற அனைத்து நோய்களுக்கும் விலங்குகள், 30 நாட்களுக்கே தனிமைப்படுத்தப்படுவது, காலத்துக்கு உட்படுத்தப்படுகின்றன.இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## திண்டமங்கலத்தில்விதை கிராம பயிற்சி

நாமக்கல்: நாமக்கல் அடுத்த திண்டமங்கலம் கிராமத்தில், விதை கிராம திட்ட பயிற்சி நடந்தது.பஞ்சாயத்து தலைவர் சரஸ்வதி தலைமை வகித்தார். விதை பண்ணை அமைத்தல், வேளாண் துறையில் செயல்படுத்தபடும் திட்டம், மண் பரிசோதனை, நிலக்கடலை உள்ளிட்ட எண்ணெய் வித்துகள் பயிரிடுதல் மற்றும் சாகுபடி தொழில் நுட்பம் குறித்து, வேளாண் அதிகாரிகள், விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினர்.விதைச் சான்று உதவி அலுவலர் சுப்ரமணியம், மண் பரிசோதனை நிலைய அலுவலர் சதாசிவம், கவிதா உள்பட பலர் பங்கேற்றனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**07.10.2013**

**விளை பொருட்களை சேமிக்க 5 இடங்களில் குளிர்சாதன கிட்டங்கி கட்டும் பணி தீவிரம்**

திண்டுக்கல் மாவட்டத்தில் விளைபொருட்களை சேமித்து வைப்பதற்காக மேலும் 5 இடங்களில் குளிர்சாதன கிட்டங்கிகள் கட்டப்பட்டு வருவதாக கலெக்டர் வெங்கடாசலம் கூறினார்.

திண்டுக்கல் மாவட்டம் பலக்கனூத்து தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில், ரூ.11 லட்சத்தில் 100 டன் கொள்ளவு கிட்டங்கி கட்டப்படுகிறது. இப்பணிகளை கலெக்டர் வெங்கடாசலம் ஆய்வு செய்தார். பின்பு அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

மாவட்டத்தில் மொத்தம் 197 தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் உள்ளன. இந்தச் சங்கங்களில் தற்போது ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியிலிருந்து கிட்டங்கிகள் கட்டப்பட்டுள்ளன. இதில் ஆயிரம் டன் கிட்டங்கி ரூ.36 லட்சத்திலும், 100 டன் கிட்டங்கி ரூ.11 லட்சத்திலும், 500 டன் கிட்டங்கி ரூ.27 லட்சத்திலும் கட்டப்பட்டுள்ளன.

விளைவித்த பொருட் களை இந்த கிட்டங்கிகளில் வைத்துக் கொள்ளலாம். அறுவடையின்போது விலை குறைவாக இருந்தால், அவற்றை சேமித்து வைத்து கூடுதல் விலை கிடைக்கும்போது விளைபொருட்களை விற்பனை செய்யலாம். இப்பொருட்களின் மதிப்பு அடிப்படையில் 80 சதவீத அளவிற்கு கடன் வழங்கப்படும்.

நெல், மக்காச்சோளம் போன்ற நீண்ட நாட்கள் இருப்பில் வைக்கக்கூடிய விளைபொருட்கள் மட்டுமே சேமித்து வைக்கப்படும். குறுகிய காலத்தில் வைத்திருக்கக் கூடிய பொருட்கள், பழைய கிட்டங்கிகளில் மட்டுமே வைக்கப்படும்.

ஒட்டன்சத்திரத்தில் வேளாண் விற்பனை அங்காடி கட்டப்பட்டு வருகிறது. அய்யலூரில் தக்காளி கிட்டங்கி கட்ட அனுமதி கோரியுள்ளனர். 5 இடங்களில் குளிர்சாதன கிட்டங்கி கட்டப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகள் தீவிரமாக நடந்துவருகின்றன. இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டுறவு இணைப்பதிவாளர் செல்வக்குமரன், பழநி கூட்டுறவு சங்கத் துணைப்பதிவாளர் நடராஜன், சத்திரப்பட்டி கூட்டுறவு சங்க துணைப்பதிவாளர் செல்வராஜா, ஊராட்சிகளின் உதவி இயக்குநர்(பயிற்சி) கங்காதரணி, பலக்கனூத்து ஊராட்சி தலைவர் மணிகண்டன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**மூணாறில் உழவர்சந்தை அமைக்க விவசாயிகள் கோரிக்கை**

மூணாறில் உழவர் சந்தை அமைக்க காய்கறி விவசாயிகள் கோ ரிக்கை விடுத்துள்ளனர். மூணாறு, மாட்டுப்பட்டி, வட்டமடை மற்றும் காந்தலூர் பஞ்சாயத்துக்கு உட்பட்ட பகுதிகளில் தமிழர்கள் அதிகம் வசித்து வருகின்றனர். இவர்கள் இங்குள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் உருளை கிழங்கு, முட்டைக்கோஸ், கேரட், பீன்ஸ் உள்ளிட்ட பல்வேறு காய்கறி பயிர்கள் பயிரிட்டுள்ளனர். இவர்கள் தங்களின் விவசாயத்துக்கு தேவையான உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்றவற்றை தமிழகம் வந்து வாங்கி வர வேண்டியது உள்ளது.

இதனால் இவர்களின் விளைபொருட்களுக்கான உற்பத்தி செலவு அதிகரிக்கிறது. அதே வேளையில் அவர்களின் விளைபொருட்களை விற்கவும் முறையான சந்தை வசதிகளை மாநில அரசின் வேளாண்மை துறை செய்து கொடுக்கவில்லை. எனவே

விவசாயிகள் தங்களின் விளைபொருட்களை இடைத்தரகர்களிடம் மிகவும் குறைந்த விலைக்கு விற்க வேண்டியது உள்ளது. தற்போது உருளைக்கிழங்கு, கேரட் போன்றவற்றின் விலையும் வீழ்ச்சி அடைந்துள்ளது. இடைத்தரகர்களிடம் விற்பனை செய்யும் போது விவசாயிகள் மேலும் நஷ்டம் ஏற்படுகிறது. எனவே தமிழகத்தை போல் மூணாறில் ஒரு உழவர் சந்தையை ஏற்படுத்திக் கொடுக்க கேரள அரசின் வேளாண்மைத்துறை முன்வர வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**முகூர்த்த நாட்கள் குறைந்ததால் மல்லிகை பூவுக்கு விலை இல்லை**

புரட்டாசி மாதம் பிறந்ததில் இருந்து முகூர்த்த நாட்கள் குறைந்து விட் டதால் மல்லிகை பூவுக்கு விலை இல்லாமல் போய் விட்டது. இதனால் மல்லிகை பயிரிட்டுள்ள விவசாயிகள் சோகத்தில் உள்ளனர்.

தேவாரம் பகுதியில் பல்லவராயன்பட்டி, மேலசிந்தலைசேரி, லட்சுமிநாயக்கன்பட்டி, அனுமந் தன்பட்டி, க.புதுப்பட்டி உள்ளிட்ட ஊர்களில் மல்லிகை பூக்கள் அதிகள வில் பயிரிடப்பட்டுள்ளன. இங்கு விளையும் மல்லிகை பூக்கள் அதிகமான அளவில் கம்பம், சீலையம்பட்டி பூமார்க்கெட்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. தினந்தோறும் மல்லிகை பூக்கள் பறிக்கப்பட்டு மார்க்கெட்டிற்கு கொண்டு சென்ற பின்பு தான் என்ன விலை விற்கிறது என்றே விவசாயிகளுக்கு தெரியும்.
முகூர்த்த நாட்களை வைத்தே மல்லிகை பூக்களுக்கு விலை அமைகிறது. புரட்டாசி மாதம் பிறந்ததில் இருந்து முகூர்த்த நாட்கள் அதிகம் இல்லை. இதனால் திருமணங்களும் நடைபெறுவது இல்லை. ஒன்றிரண்டு அவசர திருமணங்களே நடக்கிறது. இதனால் மல்லிகைப்பூக்களின் பயன்பாடு மிகவும் குறைந்துவிட்டது. உற்பத்தி செய்த மல்லிகை பூக்களுக்கு பறிப்புகூலியை கூட கொடுக்க முடியாத சோகத் தில் விவசாயிகள் உள்ளனர்.

முகூர்த்த காலங்களில் கிலோ ரூ.1000 வரை விலை போகக்கூடிய மல்லிகை தற்போது ரூ.100 முதல் 200 வரையே வெளிமார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுகிறது. மொத்த வியாபாரிகள் இதற்கும் குறைவாகவே விவசாயிகளிடம் வாங்குகின்றனர். இதனால் விவசாயிகள் சோகத்தில் மூழ்கி உள்ள னர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், 'பூக்கள் விவசாயம் நம்பிக்கையுடன் செய்ய முடியாத நிலை உள்ளது.

உள்ளூரில் தேவைகளுக்கும் முகூர்த்தம் அதிகம் உள்ள காலங்களிலும் கிராக்கியுடன் விற்கப்படும் மல்லிகை தற்போது விலை சரிந்து விட்டது. குறைந்த அளவே விளைந்தாலும் அதற்குரிய விலையும் இல்லாதபோது வேதனை உண்டாகிறது. இதனால் பறித்த பலன் கூட கிடைக்காதநிலை உள்ளது. மல்லிகைபூக்களை குளிர்பதனக்கிடங்கில் வைத்து விற்பனை செய்யக்கூடிய வசதி ஏற்படுத்தப்படவேண்டும்', என்றனர்.

தினத் தந்தி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 07.10.2013

### வெள்ளகோவில் வாரச்சந்தையில் முருங்கைக்காய் விலை உயர்வு



வெள்ளகோவில்,

வெள்ளகோவில் வாரச்சந்தை நேற்று கூடியது. இங்கு விவசாயிகள் தங்களின் விளை நிலத்தில் விளைந்த முருங்கைக்காய் உள்ளிட்ட விளை பொருட்களை விற்பனை செய்வதற்காக கொண்டு வருகின்றனர். முருங்கைக்காய் சீசன் முடிவடைந்து விட்டதால் வாரச்சந்தைக்கு நேற்று குறைந்த அளவே முருங்கைக்காய்கள் கொண்டு வரப்பட்டு இருந்தன.

இதில் நீளமான முருங்கைக்காய் ஒன்று ரூ.2 வரை விலை போனது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். தற்போது மழை இல்லாத நிலையிலும், மரத்தில் பூத்திருந்த பூக்கள் உதிர்ந்து வருவதாலும் இனிவரும் வாரங்களில் முருங்கைக்காய் வரத்து குறைய வாய்ப்பு உள்ளது. இதனால் முருங்கைக்காய் விலை உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக கூறப்படுகிறது.

மேலும் வெள்ளகோவில் வாரச்சந்தையில் ஒரு கிலோ சின்ன வெங்காயம் ரூ.70, 2–வது தரம் ரூ.50, 3–ம் தரம் ரூ.30, பெரிய வெங்காயம் ரூ.30, கத்தரிக்காய் ரூ.40, அவரைக்காய் ரூ.30, பாகற்காய் ரூ.30, தேங்காய் ஒன்று ரூ.10–க்கும் விற்பனையானது.

**பூத்துக் குலுங்கும் செண்டுமல்லி பூக்கள்**



வருகிற 13–ந் தேதி ஆயுதபூஜை கொண்டாடப்படுகிறது. ஆயுத பூஜையையொட்டி விற்பனை செய்வதற்காக முத்தூர் அருகே மேட்டாங்காட்டுவலசு பகுதியில் ஒரு தோட்டத்தில் செண்டுமல்லி பூக்கள் பூத்துக்குலுங்குவதை படத்தில் காணலாம்.

**மகாதானபுரம், கிளை வாய்க்காலை தூர் வாரிய விவசாயிகள்**



கிருஷ்ணராயபுரம்,

வாய்க்காலை தூர்வாரக் கோரி அதிகாரிகளிடம் மனு அளித்தும் பயன் இல்லாததால் விவசாயிகளே வாய்க் காலில் இறங்கி அதிரடி யாக தூர் வாரினர்.

<u>விவசாய பணி மும்முரம்</u>

மாயனூர் காவிரி ஆற்றில் இருந்து தென்கரை வாய்க் கால்கள் பிரிந்து செல்கிறது. இந்த வாய்க்கால் இருந்து கிருஷ்ணராயபுரத்தில் மகாதானபுரம் கிளை வாய்க்கால் பிரிந்து கிருஷ்ண ராயபுரம், பொய்கைபுதூர், கம்ம நல்லூர், மகாதானபுரம், சிந்தலவாடி வரை செல் கிறது. இந்த வாய்க்கால்களின் மூலம் சுமார் 1000 ஏக்கர் விவசாய நிலம் பாசன வசதி பெறுகிறது.

இந்த பகுதியில் நெல், வாழை, கரும்பு, வெற்றிலை கொடிக்கால் ஆகிய பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு போதியளவு மழை இல்லாததால் வாய்க்கால்கள் எல்லாம் வறண்டு போய் காணப்பட்டது. கடந்த 7 மாதங்களுக்கு பிறகு தற்போது அனைத்து கிளை வாய்க்கால்களிலும் தண்ணீர் செல்கிறது. விவசாய பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது.

மகாதானபுரம் கிளை வாய்க்கால்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் அந்த ஊராட்சி மூலம் தூர் வாரப்பட்டு உள்ளது என்றாலும், கிருஷ்ணராயபுரம் உள்ளிட்ட சில பகுதியில் வாய்கால்களில் புதர் மண்டி போய் இருந்ததால் தண்ணீர் செல்வதில் தடை ஏற்பட்டது. இந்த வாய்க்காலை தூர்வார கோரி விவசாயிகள் பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்த வாய்க்காலில் தண்ணீர் ஓட்டம் தடைப்பட்டதை அடுத்து கிருஷ்ணராயபுரத்தில் பகுதி விவசாயிகள் தன் கையே தனக்கு உதவி என்பது போல வாய்க்காலில் இறங்கி முள் புதர்களை அகற்றி தண்ணீர் ஓட்டத்தை சீர்படுத்தினர்.

<u>கோரிக்கை</u>

மகாதானபுரம் கிளை வாய்க்காலை தூர் வாரி கரைகளை சீர்படுத்த வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். விவசாயத்திற்கு அதிக முக்கிய தேவை தண்ணீர் தான் அந்த தண்ணீரே செல்வதில் பிரச்சினை என்றால் எப்படி விவசாயத்தை காப்பாற்ற முடியும் என விவசாயிகள் புலம்பி வருகின்றனர்.

**விவசாயிகளுக்கு மண் பரிசோதனை ஆலோசனை கூட்டம்**







மயிலம்,

மயிலம் அருகே நெடிமோழியனூர் கிராமத்தில் விவசாயிகளுக்கு மண் பரிசோதனை செய்வது குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மோழியனூர் ஒன்றியக்குழு உறுப்பினரும், அட்மா திட்ட தலைவருமான இல.கண்ணன் தலைமை தாங்கினார். ஊராட்சி தலைவர் உமாகோவிந்தராஜ் வரவேற்றார். வேளாண்மை உதவி அலுவலர்கள் மங்கையர்கரசி, சத்தியா ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு விதை மண் பரிசோதனை செய்து காண்பித்தனர். அப்போது அவர்கள் கூறுகையில், மண்ணை பரிசோதனை செய்து நுண்ணூட்ட உரத்தை தகுந்தாற்போல பயன்படுத்தினால் அதிக மகசூல் பெற்று பயனடையலாம் என்றனர். இதில் கலந்து கொண்டவர்களுக்கு உரம், எலி கொல்லி மருந்து உள்ளிட்டவைகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஊராட்சி ஒன்றிய திட்ட கணக்காளர் வாசுதேவன், துணைத்தலைவர் ஜனார்த்தனன், வார்டு

உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். முடிவில் ஊராட்சி செயலாளர் சுப்பிரமணி நன்றி கூறினார்.

## விழுப்புரம் பகுதிகளில் மக்காச்சோளம் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்



விழுப்புரம்,

விழுப்புரம் பகுதிகளில் மக்காச்சோளம் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**மக்காச்சோளம்**

விழுப்புரம் மாவட்டம் விவசாயம் நிறைந்த மாவட்டம். இங்குள்ள விவசாயிகள் அந்தந்த பருவத்திற்கேற்ப பல்வேறு பயிர் வகைகளை தங்களது விளைநிலங்களில் ஆர்வமுடன் பயிரிட்டு வருகின்றனர். விழுப்புரத்தை அடுத்த சோழகனூர், சூரப்பட்டு பகுதிகளில் உள்ள விவசாயிகள் சுமார் 10 ஏக்கர் அளவில் மக்காச்சோளம் பயிரிட்டுள்ளனர். இந்த மக்காச் சோளம் கதிர்விட்டு நன்றாக வளர்ந்து தற்போது அறு வடைக்கு தயாராகி வருகின்றது. இதுபற்றி விவசாயிகள் கூறுகையில், மக்காச்சோளம் விதைகளை வாங்கி மானாவரி நிலங்களில் நட வேண்டும். 3 மாத பயிரான மக்காச்சோளம், விதையை போட்டவுடன் 15 நாட்களில் முளைப்பு வந்துவிடும். அடுத்த சில நாட்களில் செடியாக வளர்கிறது. செடி வளர்ந்து 1 மாதம் கழித்து களையெடுத்து கால் மடிக்க வேண்டும். அடுத்த ஒரு

மாதத்தில் மக்காச்சோளம் நன்றாக கதிர் விட ஆரம்பிக்கும். நன்கு வளர்ந்ததும் அடுத்த ஒரு மாதங்களில் அறுவடைக்கு தயாராகிறது.  இங்கு அறுவடை செய்யப்படும் மக்காச்சோளம் விழுப்புரம் மார்க்கெட் கமிட்டிக்கு விற்பனைக்கு அனுப்புகிறோம். 80 கிலோ கொண்ட மூட்டை ஒன்றுக்கு ரூ.2 ஆயிரம் வரை விலை போகும். இதை பயிரிட ஒரு ஏக்கருக்கு ஏர் ஓட்டும் செலவு, களைகொத்தும் கூலி, அறுவடை செய்யும் செலவு, உரம் என சுமார் ரூ.10 ஆயிரம் வரை செலவாகும். ஆனால் பாதிக்கு, பாதி லாபம் கிடைக்கிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**கன்னிப்பூ மற்றும் கும்பப்பூ பருவத்திற்கேற்ற புதிய நெல் கண்டுபிடிப்பு**



வேளாண்மை பேராசிரியர் மற்றும் தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது. குமரி மாவட்டத்தின் பருவ நிலை, சாகுபடி முறைகள் முதலியன தமிழகத்தின் மற்ற மாவட்டங்களைவிட மாறுபட்டுள்ளன. இந்த மாவட்டத்திற்கேற்ற உயர் விளைச்சல் ரகங்களை உருவாக்கவும், உழவியல் மற்றும் பூச்சியல் ஆராய்ச்சி மேற்கொள்ளவும் 1976–ம் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் கோயமுத்தூர் வேளாண்மை பழ்கலைக்கழகத்தின் கீழ் குமரிமாவட்டம் திருப்பதி சாரத்தில் தொடங்கப்பட்டது.

**<u>நெல் ரகங்கள்</u>**

வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் திருப்பதி சாரத்திலிருந்து இதுவரை நான்கு நெல் ரகங்கள் உருவாக்கப்பட்டன. இதில் டி.பி.எஸ் 3 என்ற ரகம் குமரிமாவட்டத்தில் கும்பப்பூ பருவத்தில் அதிக பரப்பளவில் பயிரிடப்படுகிறது.

இந்த வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் குமரிமாவட்டத்திற்கு ஏற்ற குறுகிய மத்தியகால ரகங்கள் தேர்வு செய்யவும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## புதிய வளர்ப்பு நெல்

வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் திருப்பதி சாரம், குமரிமாவட்டத்திலிருந்து குறுகிய கால பயிராக டி.பி. 08010 என்ற நெல் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த நெல் அம்பை 16 ரகத்தையும், ஆடுதுறை 37 என்ற ரகத்தையும் சேர்த்து உருவாக்கப்பட்டது. இதன் காலம் 118 நாட்கள் ஆகும்.

வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் 4 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்த வளர்ப்பானது சராசரியாக எக்டருக்கு 6377 கிலோ மகசூல் கொடுத்தது. இந்த மகசூலானது அம்பை 16 விட 14.7 சதவிதம் அதிகமாகும்.

2009–2010 ம் ஆண்டு நடத்தப்பட்ட பல்திடல் ஆய்வில் இந்த வளர்ப்பு, எக்டருக்கு 6315 கிலோ மகசூல் கொடுத்தது. இந்த ரகமானது ஒப்பீட்டு ரகமான அம்பை 16, ஆடுதுறை 43 ஐ விட 15 சதவிதம் அதிக மகசூல் கொடுத்துள்ளது. இந்த வளர்ப்பானது 2010–2011, மற்றும் 2011–2012 ம் ஆண்டுகளில் அனைத்து இடங்களிலும் நடத்தப்பட்ட ஆராய்ச்சியில் ஒப்பீட்டு ரகமான அம்பை 16 விட 2.4 சதவிதம் அதிக மகசூல் கொடுத்துள்ளது.

மேலும் இவ்வளர்ப்பானது குமரிமாவட்டத்தில் அம்பை 16 மற்றும் ஆடுதுறை 43 ஐ விட முறையே 9 மற்றும் 20 சதவிதம் அதிக மகசூல் கொடுத்துள்ளது. எக்டருக்கு 6 டன் அதிக மகசூல் ஈட்டி சாதனை படைத்திருக்கிறார்கள். இவ்வளர்ப்பானது அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்ட வயல்வெளி ஆய்வில் மிக அதிக மகசூலான எக்டருக்கு 11,567 கிலோ பதிவு செய்யப்பட்டது.

குமரி மாவட்டத்தின் முன்னோடி விவசாயிகளான ஸ்ரீகுமார், சுயம்புலிங்கம், மற்றும் ரமேஷ்பாபு, ஆதிநாராயணன் ஆகியோர் இவ்வளர்ப்பினை பயிரிட்டுள்ளார்கள். விவசாய பெருமக்கள் நேரில் திடலை பார்வையிட்டு இந்த வளர்ப்பினைப் பற்றி முழுமையாக தெரிந்து கொள்ளவும்.

## எதிர்ப்பு திறன்

இந்த வளர்ப்பானது தண்டுதுளைப்பான், இலை சுருட்டுப்புழு, தத்துப்பூச்சி ஆகிய பூச்சிகளுக்கு மத்திய எதிர்ப்புத்திறனும் உடையது. குறுகிய பருமனான அரிசியை உடைய இந்த ரகம் நல்ல அவைத்திறன், நடுத்திறன், நடுத்தர அமைலோஸ் மாவுத்தன்மையும், உணவு தயாரிப்பதற்கான சிறந்த குணத்தையும் கொண்டுள்ளதால், ஒப்பீட்டு ரகமான அம்பை 16 விட சிறந்ததாக உள்ளது.

தமிழ் நாட்டில் இந்த ரகம் கார் மற்றும் பிந்திய பிசான பருவத்தில் பயிரிட ஏற்ற ஒரு ரகமாகும். இவை பற்றிய மேலும் விவரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், திருப்பதிசாரம் என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

**கரீப் சாகுபடி பரப்பளவு 5 சதவீதம் அதிகரித்தது**



புதுடெல்லி

அக்டோபர் 4 நிலவரப்படி, நடப்பு கரீப் பருவத்தில் (ஜூன் – அக்டோபர்) பயிர்கள் சாகுபடி பரப்பளவு 5 சதவீதம் அதிகரித்து 10.46 கோடி ஹெக்டேருக்கும் அதிகமாக விரிவடைந்துள்ளது. இதில் நெல் பயிரிடும் பரப்பளவு 2 சதவீதம் மட்டும் உயர்ந்து 3.77 கோடி ஹெக்டேராக உள்ளது. இது சென்ற ஆண்டின் இதே காலத்தில் 3.70 கோடி ஹெக்டேராக இருந்தது.

நடப்பு ஆண்டில் தென்மேற்கு பருவமழை சிறப்பாக இருந்தது. இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தகவல்படி, ஜூன் 1 முதல் செப்டம்பர் 25–ந் தேதிவரை நாட்டில் சராசரி அளவை விட 5 சதவீதம் அதிக மழை பெய்துள்ளது. தென்மேற்கு பருவமழையை நம்பியே கரீப் பருவ சாகுபடி பணிகள் நடைபெறுகின்றன. இந்த ஆண்டில் மழை நன்கு பெய்துள்ளதால் வேளாண் நடவடிக்கைகள் விறுவிறுப்பாக

உள்ளன. இதனால் அனைத்து பயிர்களுக்கான சாகுபடி பரப்பளவு விரிவடைந்துள்ளது.

பருப்பு பயிரிடும் பரப்பளவு 1.07 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது. எண்ணெய் வித்துக்கள் பரப்பளவு 1.95 கோடி ஹெக்டேராக அதிகரித்துள்ளது. சிறு தானியங்கள் சாகுபடி பரப்பு 1.96 கோடி ஹெக்டேராக விரிவடைந்துள்ளது. பணப்பயிர்களில் பருத்தி பரப்பளவு 1.15 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது. அதே சமயம் கரும்பு சாகுபடி பரப்பு 50.06 லட்சம் ஹெக்டேரிலிருந்து 48.74 லட்சம் ஹெக்டேராக சரிவடைந்துள்ளது. சணல் பயிரிடும் பரப்பளவும் ஓரளவு குறைந்துள்ளது.